தோற்றம் : 1971 அறிந்தேற்பு : 341/1980

# தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்

(Recognized by the Govt. of Tamilnadu G.O.No. 341, Dt.22.03.1980)

TAMILNADU GOVERNMENT COLLEGE TEACHERS' ASSOCIATION

TNGCTA நரசிங்கம் நிலையம், 2, சைடோஜி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005. Ph : 28516573 Telefax : 28414354

பேரா. சீ. தமிழ்மணி – தலைவர் | முனைவர். எல். பிரதாபன் – பொதுச்செயலர் | முனைவர். சி. திருச்செல்வம் – பொருளர்

முனைவர். இரா. வெங்கடாசலம், முனைவர். உஷா ரகோத்தம் – துணைத் தலைவர்கள்

பேரா. சோ. சுரேஷ், முனைவர். ச. காமாட்சி – இணைச் செயலர்கள்

சுற்றறிக்கை எண். 32 நாள் : 23.06.2014

இனிய தோழர்களே, தோழியரே!

வணக்கம். நீதிமன்றத் தடையாணை நீக்கம் செய்யபட்டதை தொடர்ந்து மாநிலத் தேர்தல் நடத்துவது தொடர்பான முடிவுகளை மேற்கொள்ள இயக்கத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் சென்னையில், தலைமை அலுவலகம், பேரா. நரசிங்கம் நிலையத்தில் 22.06.2014 அன்று முற்பகல் 10.30 மணியளவில் மாநிலத் தலைவர் பேரா. சீ. தமிழ்மணி தலைமையில் நடைபெற்றது. சென்னை மண்டலச் செயலர், பேரா. ஜோதி வெங்கடேசுவரன் அனைவரையும் வரவேற்றார்.

**இரங்கல் தீர்மானம்**

குமாரபாளையம் அரசு கல்வியியல் கல்லூரி இயற்பியல் துறைப் பேராசிரியர் திரு. என். சுப்பிரமணி அவர்கள் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தலைவர் உரை**

இயக்கம் சந்தித்த பிரச்சனைகள், மாநிலத் தேர்தலுக்கானத் தடையாணை, தேர்தல் ஒத்திவைப்பு, வழக்குமன்ற தொடர் நடவடிக்கை, மேல்முறையீட்டில் தடையாணை நீக்கம் போன்ற செய்திகள் குறித்து தனது தலைமை உரையில் தலைவர் விளக்கி, மாநிலத் தேர்தலை நல்லமுறையில் நடத்தி முடித்திட அனைவரும் ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

**பொதுச் செயலர் உரை**

தடையாணை நீக்கம், மாநிலத் தேர்தல் நடத்துவது தொடர்பான வழக்குரைஞர் ஆலோசனை, நிலுவையில் உள்ள கோரிக்கைகள் நிலை, தொடர் நடவடிக்கை, கோரிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பாக பொதுச் செயலர் உரையில் குறிப்பிட்டார். மாநிலத் தேர்தலை நல்லமுறையில் விரைவாக நடத்திட கருத்துக்கள் வரவேற்கப்பட்டன.

மாநிலத் தேர்தலை போதிய கால அவகாசத்துடன் நேரடியாக வாக்குப் பதிவுக்குச் செல்லாம் என்ற நமது வழக்கறிஞரிடமிருந்து பெறப்பட்ட கருத்து செயற்குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டது. கடந்த (தடை செய்யப்பட்டிருந்த) தேர்தலுக்கான தகுதியுள்ள வேட்பாளர் பட்டியலில் மாநிலத் தலைவர் பதவிக்குப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த பேரா. சீ. தமிழ்மணி அவர்கள் தனது சொந்த விருப்பத்தின்பேரில் அந்தப் போட்டியிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தார். இதைத் தொடர்ந்து விவாதங்களுக்குப் பின்னர், புதிய தேர்தல் அறிவிப்பு அட்டவணையுடன் மாநிலத் தேர்தலை நடத்துவது என முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு, அம்முடிவினை மாநிலத் தேர்தல் குழுவிற்கு அளிப்பது எனவும்

தீர்மானிக்கப்பட்டது. அதனடிப்படையில், 13.07.2014 ஞாயிற்றுக்கிழமை அன்று திருச்சியில் மாநிலத் தேர்தலை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. நீண்ட விவாதத்திற்குப் பின், பின்வரும் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானங்கள்**

1. முன்னதாக அமைக்கப்பட்ட, பேரா. ந. செல்வராஜ் அவர்களை அமைப்பாளராகவும், பேரா. ஜோசப் துரை, பேரா. கு. நடராஜன் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட தேர்தல் குழுவே தொடர்ந்து மாநிலத் தேர்தலை நடத்திடலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.
2. 11.08.2013 இல் நடைபெறவிருந்த மாநிலத் தேர்தலுக்கு இறுதி செய்யப்பட்டு வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலில் பணி ஒய்வு பெற்றவர், பணியிட மாற்றம் பெற்ற கிளை வாக்காளர்கள் எனில், வேறு கல்லூரிக்கு இடப்பெயர்வு பெற்றுச் சென்றவர்கள், மண்டலப் பொறுப்பாளர் எனில், வேறு மண்டலத்திற்கு மாறுதல் பெற்றுச் சென்றவர்கள், பணி துறந்து வேறு பணிக்குச் சென்றவர்கள் ஆகியோர் பெயர்களை மட்டும் நீக்கி, அதனடிப்படையில் இறுதி வாக்காளர் பட்டியல் தயாரித்து தேர்தல் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.
3. புதிய தேர்தல் அறிவிப்புடன், புதிதாக வேட்பு மனுக்கள் பெற்று 13.07.2014 ஞாயிறு அன்று திருச்சியில் மாநிலத் தேர்தலை நடத்திட மாநிலத் தேர்தல் குழுவைக் கேட்டுக் கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.
4. கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரியில் தேர்வு நெறியாளர் நியமனத்தில் அரசாணை எண். 51–க்கு முரணாக நியமனம் செய்த, அன்றைய கல்லூரிக் கல்வி இயக்குநரின் போக்கைக் கண்டிப்பதோடு, பணிமூத்தவரை தேர்வு நெறியாளராக நியமிக்க வேண்டுமென தற்போதைய கல்லூரிக் கல்வி இயக்குநரைக் கேட்டுக் கொள்ளத் தீர்மானிக்கலாகிறது.

இறுதியில், மாநில இணைச் செயலர் ச.காமாட்சி, நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவுற்றது.

திருச்சி ஈ.வெ.ரா. அரசு கல்லூரி, வரலாற்றுத் துறைப் பேராசிரியரும், நமது கழகத்தின் கிளைச் செயலாளருமான பேரா. லெஸ்லி தியாககுமார் அவர்கள் 22.06.2014 அன்று அவர்தம் குடும்பத்துடன் காரில் பயணம் செய்தபோது, எதிர்பாராதவிதமாக சாலை விபத்து ஏற்பட்டு, அவரும், அவரின் துணைவியார் மற்றும் உறவினர் மூவரும் அகால மரணமடைந்த செய்தி கேட்டு மாநிலச் செயற்குழுவில் கலந்து கொண்ட அனைவரும் அதிர்ச்சியும், வருத்தமும் அடைந்தனர். அவர்களை இழந்துவாடும் அன்னாரின் குடும்பத்தினருக்கு இயக்கத்தின் சார்பாக ஆழ்ந்த இரங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எற்றுஎன்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றுஅன்ன செய்யாமை நன்று. –குறள்.

தோழமையுடன்,

சென்னை–5
23.06.2014

(இல. பிரதாபன்)
பொதுச் செயலர்